[1970 பிப்ரவரி 28

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, இந்த பர்கூர் மலைவாசிகள் ஐந்தாம் வகுப்புகூட படிக்காதவர்கள். அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போக வேண்டுமானால், குறைந்தது 25 மைல் நடக்க வேண்டியிருக்கிறது. போக்கு வரத்தும் சரிவர கிடையாது. ஆகவே, இதைத் தனிப்பட்ட முறையில், தனிச் சலுகை கொடுத்துக் கவனித்து, அங்கு உயர் நிலைப் பள்ளி வைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்பொழுது பர்கூரில் இருப்பது தங்கிப் படிக்கும் துவக்கப் பள்ளி. அங்கே 50 மாணவர்கள் இருக்கிறார்கள். அதை அப்படியே உயர்த்த வேண்டும் என்றாலும், அதை ஒரு உயர் துவக்கப் பள்ளியாகத்தான் உயர்த்த முடியும். உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த முடியாது. அங்கே, 50 மாணவர்களுக்கான, அவர்களுக்குத் தேவையான வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேறு புதிய செயற்குறிப்பு எதுவும் வரவில்லை அதற்கு அவசியம் இல்லை என்றும் அரசாங்கம் கருதுகிறது.

கால்நடைப் பண்ணைகள்

* 140 வினா—**திரு. மா. பா. சாரதி:** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள 'கால்நடைப் பண்ணைகளை விரிவாக்கும் திட்டம் உண்டா?

(இ) 1967-68-ம் ஆண்டு இத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி எவ்வளவு கிடைத்தது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இத் திட்டத்திற்கு 1967-68-ம் ஆண்டுக்கான மத்திய அரசு நிதி உதவி வரையறுக்கப்படவில்லை. ஆனால், 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969-74) நிதி உதவி ரூ. 30 லட்சம் தமிழ் நாட்டிலுள்ள கால்நடைப் பண்ணைகளை விரிவாக்கும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் நாட்டில் கால் நடைப்பண்ணைகள் எத்தனை இருக்கின்றன? அவை எங்கெங்கே இருக்கின்றன? அதனால் விவசாயிகள் அடைந்த நன்மைகள் யாவை என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழகத்தில் 11 பண்ணைகள் இருக்கின்றன--ஓசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, அபிசேகப்பட்டி, உதகமண்டலம், அலமாடி, காட்டுப்பாக்கம், சின்னசேலம், சாத்தூர் போன்ற 11 இடங்களில் இருக்கின்றன.

Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, last year there was a proposal to start a Central Cattle Farm in the Hosur taluk. About 1,000 acres of good land are available in the Sholagiri

1970 பிப்ரவரி 28]

Panchayat Union area free of cost. Mr. B. Sivaraman, Secretary, Ministry of Agriculture, Governmentof India, visited that place and recommended the scheme. So, may I know from the Hon. Minister whether any step has been taken to press the Government of India to start the new Farm in the Hosur taluk?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுபற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, ஒரு கால்நடைப் பண்ணை வைக்க வேண்டிய சாத்தியம் கூறுகள் என்னென்ன? இயற்கை வசதிகள், இன்னும் என்னென்ன தேவை என்று அரசாங்கம் நிர்ணயிருக்கிறது? வட ஆர்க்காடு மாவட்டத்தில் கால் நடைப் பண்ணை வைக்கவேண்டும் என்று மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வந்ததா? அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுமாதிரி அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. ஏதாவது வந்தால் பரிசீலிக்கலாம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: சென்ட்ரல் அஸிஸ்டென்ஸ் அபிவிருத்திக்கா? அல்லது மீண்டும் புதிதாக ஆரம்பிக்கவா? 'மிக்ஸட்ஃபார்ம்' ஆகச் செய்யலாம் என்பதற்காகவா 'சென்ட்ரல் எய்ட்' கொடுக்கப்படுகிறது? நம்முடைய திட்டம் வேறு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது அபிவிருத்திக்கும், புதுப் பண்ணை வைக்கவும் உபயோகப்படுத்தலாம். இருக்கின்ற பண்ணை சரிவர நடக்கவில்லை என்றால், அதை மூடிவிட்டு, புதுப் பண்ணை துவங்கவும் செய்யலாம்.

ஆடுகள் மீது விற்பனைவரி விதிப்பு

* 141 வினா—**திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுகள்மீது போட்டிருக்கும் விற்பனை வரியை நீக்க அரசு உத்தேசித்திருக்கிறதா?

(இ) ஆம் என்றால், எப்போது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) 1969-ம் ஆண்டு செப்டம்பர் 24-ம் தேதி முதல் இறைச்சிக்காக விற்பனை செய்யப்படும் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், பசுக்கள், காளைகள், எருதுகள், பன்றிகள் முதலிய மிருகங்கள்மீது 1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்படி செலுத்த வேண்டிய வரியினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளது.